**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 110/2022 PW2**

07.08.2025 **வா.சா.2 ஆறுமுகம் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1 முதல் 4 பிரதிவாதிகளை எனக்கு தெரியும். பிரதிவாதிகளின் அப்பா ரவியை எனக்கு சுமார் 10 - 15 ஆண்டுகளாக தெரியும். வாதி கண்ணன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் ஆவார். பாண்டில் நான் முதலாவதாகவும், குமார் இரண்டாவதாகவும் சாட்சி கையொப்பம் போட்டோம். குமார் திருவண்ணாமலை டவுனைச் சேர்ந்தவர். குமார் எல்லா வித கூலி வேலைக்கும் செல்வார். ஏழுமலை எனக்கு உறவுக்காரர் கிடையாது. ஏழுமலையை அவர் கையொப்பம் போட வரும் போது தான் தெரியும், அதற்கு முன்பு அவர் யார் என்று தெரியாது. பிரதிவாதிகளை அவர்களின் சிறு வயது முதலே தெரியும். இறந்த ரவி உப்பு வியாபாரம் செய்து வந்தார். அவரிடம் உப்பு வேண்டும் என பணம் கொடுத்தால் அவர் கைப்பட ஒரு ரசீதை எழுதி கொடுப்பார். அந்த ரசீதை கடையில் காண்பித்தால் உப்பு கொடுப்பார்கள். 20.01.2020ந் தேதி பாண்டு எழுதப்பட்டது. மற்றொரு பாண்டு 25.03.2020ந் தேதி எழுதப்பட்டது. மூனாவது பாண்டு 30.05.2020ந் தேதி எழுதப்பட்டது. ஒவ்வொரு பாண்டு எழுதும் போது ரவி என்னை சாட்சி கையொப்பம் போட அழைத்தார். எனது வீட்டிற்கு வந்து அழைத்தார். என்ன நேரத்தில் வந்து என்னை கூப்பிட்டார் என்று எனக்கு தற்போது நியாபகம் இல்லை. எந்த மையினால் பாண்டு எழுதப்பட்டது என்று தற்போது நியாபகம் இல்லை. பாண்டில் உள்ள எனது சாட்சி கையொப்பத்திற்கு கீழ் எனது அப்பா பெயரையோ, முகவரியையோ எழுதவில்லை என்றால் சரிதான். கடனை எதற்காக வாங்கினார் என்ற விவரம் ரவி என்னிடம் சொன்னாரா என்றால் உப்பு வாங்குவதற்காக கடன் வாங்குவதாக சொன்னார். ரவி எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் அவரது இறப்பிற்கு நான் சென்று பார்த்தேன். பிரதிவாதிகளிடம் ரவி கடன் பெற்ற விவரத்தை நான் சொன்னேனா என்றால் இல்லை. ரவி கடனையோ, வட்டியையோ செலுத்தினாரா என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவர் செலுத்தவேயில்லை. கண்ணனை தவிர வேறு யாரிடமாவது கடன் வாங்கியதாக ரவி என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. ரவியிடம் சென்று வட்டி வாங்கி வரலாம் என கண்ணன் என்னை அழைத்தாரா என்றால் அழைத்தார். அதன்படி நானும், கண்ணனும் ரவியிடம் சென்று கேட்டோம், அதற்கு ரவி கொஞ்சம் பொருத்து தருகிறேன் என்று சொன்னார். அவ்வாறு கேட்ட தேதி, கிழமை என்ன என்று கேட்டால் தற்போது நியாபகம்

இல்லை.  ரவி செக்கு, பாண்டு ஆகியவற்றை தன்னுடைய கடையில் வைத்திருந்தார் என்றும், அவருக்கு நானும், வாதியும் பழக்கப்பட்டவர்கள் என்ற முறையில் சென்று அவர் வைத்திருந்த செக்கு, பாண்டு ஆகியவற்றை எடுத்து வந்து விட்டோம் என்றால் சரியல்ல. பாண்டு பத்திரம் நான், வாதி மற்றொரு சாட்சி மற்றும் பாண்டு எழுதியவருடன் சேர்ந்து போலியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல.  வெறும் உப்பு வாங்குவதற்காக பாண்டில் சொல்லியுள்ள தொகையை ரவி வாதியிடம் வாங்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.  ரவியிடம் அதிகமான சொத்து உள்ளது என்றும், அதனை அபகரிப்பதற்காக வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  ரவி பாண்டில் கையொப்பம் போட வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.